CC 546/2023

29.10.2024.

பு.சா.1,

பெயர்: சாகுல் ஹமீது

த/பெ. ஹனீபா

பு.சா.1 MP No.1/2024-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி மரகதத்தை எனக்கு எனது நண்பர் செந்தில்குமார் மூலம் தெரியும். செந்தில்குமாமரின் அப்பா பெயர் மற்றும் விலாசம் எனக்கு தெரியாது. அவர் என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியாது. நான் தொழில் செய்யும் இடத்திற்கு செந்தில்குமார் வருவதால் அதன் மூலம் அவர் எனக்கு பழக்கம்.

நான் இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். நேதாஜி ரோடு, சந்தை பகுதியில் தொழில் செய்து வருகிறேன். நான் நகராட்சியில் குத்தகைக்கு எடுத்து கடை நடத்தி வருகிறேன். மரகதத்தை எனக்கு 6, 7 வருடங்களாக தெரியும். மரகதம் பாரதியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார்.

மரகதம் பாரதியார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுவதற்கு நான் ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லையென்றால் சரிதான். மரகதத்தின் கணவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. மரகதத்திற்கு ஒரு மகள் உள்ளார். அவர் பெயர் எனக்கு தெரியாது.

மரகதத்தின் வீடு ஓட்டு வீடாகும். கதவு எண் தெரியாது. எந்த வீதி என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. மரகதத்தின் அப்பா பெயர் என்ன என்று எனக்கு தெரியாது. மரகதத்தின் வீடு வடக்கு பார்த்த வீடாகும். எதிரி எனக்கு நன்கு பழக்கமானவர் என்றால் சரிதான். நெருங்கிய நண்பர் அல்ல. எனது புகார் மனுவில் எதிரி எனது நண்பர் என்று

குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சுவாமிநாதன் என்பவரிடம் ஓட்டுநராக வேலை செய்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சுவாமிநாதனையே எனக்கு தெரியாது.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது )**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.